PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Nada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

ஆரோவில்லுக்கு ஜெர்மனி தூதுக் குழு வருகை



சென்னை – 16 நவம்பர், 2026 இந்தியாவுக்கான ஜெர்மனி தூதர் ஜாஸ்பர் வீக், சென்னையில் உள்ள ஜெர்மன் துணைத் தூதரகத்தின் தூதரகத் தலைவர் மைக்கேல் ஹாஸ்பர் ஆகியோர் உடன், சர்வதேச நகரமான ஆரோவில்லுக்கு சனிக்கிழமை (நவம்பர் 14, 2026) வருகை தந்தார்.

ஆரோவில் அறக்கட்டளையின் சிறப்புப் பணி அலுவலர் ஜி. சீதாராமன் உள்ளிட்ட அதிகாரிகள், ஆரோவில் நகர மேம்பாட்டுக் குழு (ATDC) மற்றும் பணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் தூதுக் குழுவினரை வரவேற்றனர்.

அறக்கட்டளை வெளியிட்ட செய்திக் குறிப்பின்படி, ஆரோவில் நகர மேம்பாட்டுக் குழு மற்றும் பணிக்குழுவினருடனான கலந்துரையாடல் இந்தப் பயணத்தின் முக்கிய நிகழ்வாக அமைந்தது. இந்தக் கூட்டத்தில் ஆரோவில் அறக்கட்டளையின் செயலரும், மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் பணியாற்றுபவரும், குஜராத் அரசின் கூடுதல் தலைமைச் செயலருமான ஜெயந்தி எஸ். ரவி காணொலி வாயிலாக உரையாற்றினார்.

ஆரோவில்லின் கேலக்ஸி மாஸ்டர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அறக்கட்டளை அதிகாரிகள் தூதுக் குழுவினருக்கு விளக்கினர். ஆரோவில்லின் குடியிருப்பு, தொழில், கலாசாரம் மற்றும் சர்வதேச மண்டலங்களை இணைக்கும் 4.4 கி.மீ. நீளமுள்ள வட்ட வடிவ கிரவுன் சாலை 98 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்களுக்கான குடியிருப்புகள், குடிமை மையமாக அமையும் நகர மன்றம், மார்னிங் ஸ்டார் மகளிர் நல மையம் மற்றும் மனித ஒற்றுமைக்கான சர்வதேச ஆராய்ச்சி மையம் (CIRHU) உள்ளிட்ட வரவிருக்கும் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.